**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பாலக்கோடு.**

**முன்னிலை : திரு.G.அஜய் விக்ரிஷ் குமார், B.B.A., LLB., (Hons)**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், பாலக்கோடு.**

**2026 –ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்(CC).20/2024**

**(CNR No.TNDP05-000274-2024)**

அரசுக்காக

காவல் உதவி ஆய்வாளர்,

மகேந்திரமங்கலம் காவல் நிலையம்,

குற்ற எண்.128/2023. ... குற்றமுறையிடுபவர்

**/இடையே/**

1. ஆறுமுகம் (வயது 28/2023)

   த/பெ. கோவிந்தராஜ்.

2. கோவிந்தராஜ் (வயது 67/2023)

   த/பெ. வெங்கட்டசாமி செட்டி.

3. ஜெயா (வயது 48/2023)

   த/பெ. கோவிந்தராஜ்.

   1 முதல் 3 எதிரிகளின் முகவரி

   பன்னிக்கொட்டாய் கிராமம்,

   ஜிட்டாண்டஅள்ளி அஞ்சல்,

   பாலக்கோடு தாலுக்கா,

   தருமபுரி மாவட்டம். ... எதிரிகள்

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.30 17:59:33 +0530

இவ்வழக்கு 21.02.2024 –அன்று இந்நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.20/2024 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, கடந்த 23.06.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.C.செந்தில்குமார்,B.A.,B.L., & திரு.P.ஆனந்தகிருஷ்ணன்,B.,Com.,LLB., மற்றும் செல்வி.R.புனிதா,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

| | | | |
|---|---|---|---|
| | S.No of the case | C.C No.20/2024 | |
| a. | The Date of commission of the offence | 20.09.2023 | |
| b. | Date of filing of FIR | 20.09.2023 | |
| c. | Details on date of arrest of Accused and date of bail | Arrest of Accused | Accused was released on Bail |
| | | -- | --- |
| d. | The date of filing of the final report in the Court | 21.02.2024 | |
| e. | The date of questioning of the accused U/s 251 of Cr.P.C. | 14.08.2025 | |
| f. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts; except routine petitions like petitions under section 317 of the Code. | NIL | |

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.30 17:59:40 +05'30'

| | | | | |
|---|---|---|---|---|
| g. | Date of examination in – chief and cross examination of a witness. | **Prosecution side witnesses** | **Chief examination** | **Cross examination** |
| | | PW1 | 24.02.2026 | 24.02.2026 |
| | | PW2 | 24.02.2026 | 24.02.2026 |
| | | PW3 | 24.02.2026 | 24.02.2026 |
| | | PW4 | 27.04.2026 | 27.04.2026 |
| | | PW5 | 27.04.2026 | 27.04.2026 |
| | | PW6 | 27.04.2026 | 27.04.2026 |
| | | PW7 | 25.05.2026 | 25.05.2026 |
| | | PW8 | 09.06.2026 | 09.06.2026 |
| | | PW9 | 18.06.2026 | 18.06.2026 |
| h. | Date of examination in – chief and cross examination of a witness. | **Nil** | | |
| i. | Date of examination of the accused and Under Section 313 of the Code. | 23.06.2026 | | |
| j. | Details of abscondence of an accused and his appearance / production, as the case may be; | **Date of issue of warrant** | **Date of withdrawal of warrant** | |
| | | -- | -- | |
| k. | Date adjourned for judgment of the case | 23.06.2026 | | |
| l. | The Date of the Order | 30.06.2026 | | |

இவ்வழக்கானது மகேந்திரமங்கலம், காவல் உதவி ஆய்வாளரால் 1 முதல் 3 எதிரிகள் மீது இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) – ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.30 17:59:45 +0530

**2. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு–**

கடந்த 20.09.2023–ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் சாட்சி 2 முருகன் பன்னிகொட்டாயில் உள்ள தனது நிலத்தை டிராக்டர் வைத்து உழவு ஓட்டிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த 1–வது எதிரி ஆறுமுகம் என்பவர், எதற்கு எங்க நிலத்தை உழவு ஓட்டுகிறாய் தேவிடியா மகனே , கண்டார ஓலி பையா என கெட்ட வார்த்தையால் திட்டியும், கையால் அடித்து கீழே தள்ளி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், சாட்சி 1, 1–வது எதிரியிடம் ஏண்டா எங்க அப்பாவ அடிச்ச என கேட்டதற்கு 1–வது எதிரி அப்படிதாண்டா அடிப்பேன் என கூறி மீண்டும் சாட்சி 2யின் தோள்பட்டையின் மீது அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 2–வது எதிரி கோவிந்தராஜ், புகார்தாரரின் தோள்பட்டையின் மீது கையால் அடித்தும், 1–வது எதிரி கட்டையால் புகார்தாரரின் தலை மீது அடித்தும், 3–வது எதிரி அரிவாளால் சாட்சி 2–ன் இடது முன் பக்க தலையில் வெட்டியும் சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 1, 2 எதிரிகள் புகார்தாரரை பிடித்துக்கொள்ள 3–வது எதிரி ஜெயா, அரிவாளால் வெட்டி கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், 1 முதல் 3 எதிரிகள் மூவரும் அரிவாளை காட்டி உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்ததாக 1 முதல் 3 எதிரிகளின் மீது இ.த.ச.பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக மகேந்திரமங்கலம், காவல் உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. 1 முதல் 3 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், 1 முதல் 3 எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு – 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. இறுதி அறிக்கையையும், அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து, 1–வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 294(b), 323, 324, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டுகளும், 2–வது எதிரி மீது இந்திய

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.30 17:59:50 +0530

தண்டனைச்சட்டபிரிவுகள் 323, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டுகளும் 3–வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 324, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்றம் பற்றி எடுத்துரைத்து வினவியபோது, 1 முதல் 3 எதிரிகள் குற்றத்தை மறுத்து விசாரணை செய்யப்படவேண்டும் என்று கோரினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பு சாட்சிகளாக அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு–</u>

i) கடந்த 20.09.2023–ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் முருகன்(அ.சா.2) பன்னிக்கொட்டாயில் உள்ள தனது நிலத்தை டிராக்டர் வைத்து உழவு ஓட்டிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த எதிரிகள் கட்டையாலும், அரிவாளாலும் தாக்கியும், மேற்படி தகராறை தடுக்க சென்ற ராஜிவ் காந்தி (அ.சா.1) தாக்கி காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள். மேற்படி தகராறில் ராஜிவ் காந்தி (அ.சா.1), முருகன்(அ.சா.2) ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயத்திற்காக வேண்டி பாலக்கோடு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் தகவலை பெற்று முதல் நிலை காவலர் திரு.பிரபு (not examined) பாலக்கோடு அரசு மருத்துவமனை சென்று முருகன் மற்றும் ராஜிவ்காந்தி ஆகியோர்களை விசாரித்து புகார்வாக்குமூலம்(அ.சா.ஆ.1) பதிவு செய்து காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜெயராமன்(அ.சா.9) வசம் ஒப்படைக்கப்பட்டது.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.30 17:59:56 +0530

ii) காவல் உதவி ஆய்வாளர் திரு.ஜெயராமன் இவ்வழக்கினை விசாரித்து அதனை நிலைய குற்ற எண்.128/2023 இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை(அ.சா.ஆ.5) பதிவு செய்துள்ளார். அதை தொடர்ந்து இவ்வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வெங்கடேஷ் (அ.சா.6), விஜய்(அ.சா.7) ஆகியோர்கள் முன்னிலையில் பார்வைமகஜர் (அ.சா.ஆ.2), மாதிரிவரைபடம்(அ.சா.ஆ.6) தயாரித்துள்ளார். மேற்படி தகராறு சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் பவுன்ராஜ் (அ.சா.3), நரசியமம்ன் (அ.சா.4), ராஜேந்திரன் (அ.சா.5) மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

iii) அதை தொடர்ந்து பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சிசிக்சை பெற்று வந்த ராஜிவ்காந்தி, முருகன் ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரபு (not examined) விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், ராஜிவ் காந்தி(அ.சா.1)–ன் காயச்சான்று (அ.சா.ஆ.3), முருகன்(அ.சா.2)–ன் காயச்சான்று (அ.சா.ஆ.4) பெற்றும், இவ்வழக்கின் கூடுதல் சாட்சியாக மருத்துவர் பாலசுப்பிரமணியம் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார், இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து, எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

6. இவ்வழக்கில் 1 முதல் 3 எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து 1 முதல் 3 எதிரிகளிடம் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் வினவிய பொழுது, 1 முதல் 3 எதிரிகள் அவற்றை பொய் சாட்சிகள் எனவும், பொய் வழக்கு என்றும் கூறினார்கள். தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.30 18:00:02 +0530

7) அரசு தரப்பு வாதுரையில் இவ்வழக்கின் 1 முதல் 3 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றசாட்டுகள் உண்மை எனவும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே எதிரிகளை தண்டிக்க வேண்டும் என வாதுரைக்கப்பட்டது.

8) 1 முதல் 3 எதிரிகள் தரப்பு வாதுரையில், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை எனவும், எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் உள்ள முன்விரோதத்தை நிறைவேற்றவே எதிரிகளின் மீது பொய் புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என வாதுரைக்கப்பட்டது.

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆழ்ந்து பரிசீலனை செய்யப்பட்டது.

10. **இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் குற்றச்சாட்டுகளும், 1–வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 294(b), 323, 324, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டுகளும், 2–வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 323, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டுகளும் 3–வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 324, 506(2)–ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பினால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே ஆகும்.**

**<u>தீர்வு</u>**

i) ராஜிவ் காந்தி (அ.சா.1) தனது சாட்சியத்தில் எதிரிகள் குடும்பத்திற்கும், தனது குடும்பத்திற்கும் பூர்விக சொத்து சம்மந்தமாக முன்விரோதம் உள்ளது எனவும், கடந்த 20.09.2023 –ம் தேதி காலை 11:00 மணியளவில் விநாயகர்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.30 18:00:24 +0530

சதுர்த்தி அன்று விநாயகர் கோவில் அருகே இருந்ததாகவும், தனது தந்தை முருகன் (அ.சா.2) சம்பவ நிலத்தில் உழவு ஓட்ட கூடாது என எதிரிகள் எனது தந்தையை அடித்ததாக போன் மூலம் தகவல் கூறினார் எனவும், தான் சம்பவ இடம் சென்ற சண்டையை விலகும் போது எதிரிகள் கோவிந்தராஜ் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் அ.சா.2 –ஐ மீண்டும் அடித்து கிழே தள்ளிவிட்டார்கள் எனவும் தான் தந்தையை அழைத்துக்கொண்டு சென்றபோது எதிரி ஆறுமுகம் கட்டையால் தனது பின் தலையில் அடித்துவிட்டார் எனவும், தான் கீழே விழுந்துவிட்டதாகவும், எதிரி ஜெயா அருவாளால் அ.சா.2 முன் தலையில் வெட்டிவிட்டார் எனவும், எதிரி கோவிந்தசாமி, ஆறுமுகம் தன்னை பிடித்து கொள்ள, எதிரி ஜெயா தனது இடது கை மணிக்கட்டில் அருவாளால் வெட்டினர் எனவும், அப்பொழுது அங்கிருந்த நரசிம்மன், ராஜேந்திரன் ஆகியோர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள் என சாட்சியம் அளித்துள்ளார் .

ii) முருகன் (அ.சா.2) தனது சாட்சியத்தில் 20.09.2023 ஆம் தேதி பகல் 11:00 மணியளவில் சம்பவ நிலத்தில் தனது அண்ணன் மற்றும் அவரது மகன் நிலத்தை ஓடக்கூடாது என அடித்தார்கள் எனவும், தான் போன் மூலம் தகவல் சொல்ல அ.சா.1, சம்பவ இடம் வந்தார் எனவும், எதிரிகள் கோவிந்தராஜ் மற்றும் ஆறுமுகம் அ.சா.1–ஐ மரக்கட்டையால் பின் தலையில் அடித்துவிட்டார்கள் எனவும், எதிரி கோவிந்தராஜ் மற்றும் ஆறுமுகம் அ.சா.1–ஐ கீழே அழுத்தி பிடித்துக்கொள்ள எதிரி ஜெயா அரிவாளால் இடது மணிக்கட்டில் ஒரு வெட்டும், தலையில் ஒரு வெட்டும் வெட்டினார் எனவும், பின்னர் எதிரி ஜெயா தனது நெற்றியில் அரிவாளால் வெட்டிவிட்டார் என சாட்சியம் அளித்துள்ளார்.

iii) பவுன்ராஜ் (அ.சா.3) தனது சாட்சியத்தில் சம்பவத்தன்று அ.சா.1 தன்னை தனது சித்தப்பா அவரது மகன் மற்றும் சித்தி அடித்துவிடதாக தன்னை அழைத்தார் எனவும், சம்பவ இடம் சென்று பார்த்தபோது அ.சா.1 –னிற்கு இடது கை மற்றும் தலையில் வெட்டுக்காயம் இருந்தது எனவும், தனது தந்தைக்கு



AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.30 18:00:30 +0530

தலையில் வெட்டு காயம் இருந்தது எனவும் காயம் பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை மாரண்டஅள்ளி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார்.

iv) நரசிம்மன் (அ.சா.4) தனது சாட்சியத்தில் சம்பவத்தின் போது தான் 100 மிட்டர் தொலைவில் தனது நிலத்தில் இருந்ததாகவும், சண்டைபோட்டு முடித்த பிறகு தான் தனக்கு தெரியும் எனவும், நிலத்தில் முருகன், கோவிந்தராஜ் மற்றும் ஆறுமுகம் சண்டை போட்டு கொண்டு இருந்தார்கள் எனவும், தான் சண்டையை விலகிவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பில் அ.சா.4 பிறழ் சாட்சியாக கருதி அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

v) ராஜேந்திரன் (அ.சா.5) தனது சாட்சியத்தில், சம்பவத்தின் போது அரை கிலோ மீட்டர் தூரத்தில் இருந்ததாகவும், நிலம் சம்மந்தமாக சண்டைபோட்டு கொண்டார்கள் என சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பில் அ.சா.5 பிறழ் சாட்சியாக கருதி அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

vi) பார்வை மகாஜர் சாட்சிகளில் வெங்கடேஷ் (அ.சா.6) மற்றும் விஜய் (அ.சா.7) தங்களது சாட்சியத்தில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைந்து தயாரித்த பார்வை மகஜரில் தங்கள் சாட்சி கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

vii) ராஜிவ்காந்தி (அ.சா.1) மற்றும் முருகன்(அ.சா.2) –க்கு சிகிச்சை அளித்த மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் அ.சா.8 சாட்சியம் அளித்துள்ளார். அவரது சாட்சியத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.2 –க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிரபு கட்டாய பணிக்காலம் முடிந்து பணியிலிருந்து விலகிவிட்டதாகவும், அவர் வழங்கிய காயச்சான்று மற்றும் காயச்சான்று ஆவணங்கள் தனது மேற்பார்வையில் இருப்பதால், தான் சாட்சியம் அளிப்பதாகவும், அவரது சாட்சியத்தில் சிகிச்சையின் போது அ.சா.1– தன்னை


AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.30 18:00:35 +0530

தெரிந்த மூன்று நபர்கள் கொடுவாளில் தாக்கியதாக கூறியதாகவும், அவருக்கு இடது முழங்கை மூட்டியில் கிழிந்த காயம் காணப்பட்டது எனவும், தலையின் பின்பகுதியில் தையல் போடப்பட்ட காயம் காணப்பட்டதாகவும், மருத்துவரின் பரிந்துரையில்லாமல் தன்னிச்சையாக சிகிச்சையில் இருந்து வெளியேறியதால் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சிகிச்சையின் போது அ.சா.2 தன்னை தெரிந்த இரண்டு நபர்கள் தாக்கினார்கள் எனவும், அவருக்கு முன்கையில் தையல் போட்ட காயமும், வலது பக்க தோள்பட்டையில் தொடுவலியும் காணப்பட்டதாகவும், மேற்படி காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியதகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

viii) ராஜிவ்காந்தி (அ.சா.1) தனது சாட்சியத்தில், எதிரி ஆறுமுகம் கட்டையால் தனது பின் தலையில் அடித்துவிட்டார் எனவும், தான் கீழே விழுந்து விட்டதாகவும், எதிரி கோவிந்தசாமி, ஆறுமுகம் தன்னை பிடித்து கொள்ள, எதிரி ஜெயா தனது இடது கை மணிக்கட்டில் அருவாளால் வெட்டினர் என சாட்சியம் அளித்துள்ள நிலையில், அ.சா.1–னிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அ.சா.8 தனது சாட்சியத்தில் அ.சா.1–ற்கு இடது கை மணிக்கட்டில் காயம் இருந்ததாக சாட்சியம் அளிக்கப்படவில்லை.

ix) முருகன் (அ.சா.2) தனது சாட்சியத்தில் எதிரி ஜெயா தனது நெற்றியில் அரிவாளால் வெட்டிவிட்டார் என சாட்சியம் அளித்துள்ள நிலையில் சிகிச்சை அளித்த மருத்துவர் அ.சா.8 தனது சாட்சியத்தில் அ.சா.2 –க்கு நெற்றியில் காயம் இருந்ததாக சாட்சியம் அளிக்கப்படவில்லை.

x) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட பவுன்ராஜ்(அ.சா.3), நரசியம்மன்(அ.சா.4), ராஜேந்திரன்(அ.சா.5) ஆகிய சாட்சிகள் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாகவும், அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளுக்கு காயம் ஏற்பட்டது எனவும் சாட்சியம் அளிக்கப்படவில்லை. பவுன்ராஜ் (அ.சா.3)

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.30 18:00:41 +0530

சாட்சியத்தின் படி அ.சா.1 மற்றும் அ.சா.2 –க்கு காயம் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், மேற்படி காயம் எதிரிகளால் ஏற்படுத்தப்பட்டது என சாட்சியம் அளிக்கப்படவில்லை.

xi) மேலும் அ.சா.1–க்கு பின் தலையில் தையல் காயம் ஏற்பட்டதாக அ.சா.8 சாட்சியம் அளித்துள்ள நிலையில், மேற்படி காயம் எதிரி ஆறுமுகம் கட்டையால் அடித்து ஏற்படுத்தினார் என அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.1 சாட்சியத்தில் படி எதிரிகளுக்கும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களுக்கு பொதுவாக உள்ள சொத்து சம்மந்தமாக முன்விரோதம் உள்ளதாக தெரிய வரும் நிலையில் மேற்படி எதிரிகள் அ.சா.1–ஐ தாக்கியதாக தனிநபர் சாட்சிகள் அடிப்படையில் நிரூபிக்கபடவில்லை. அ.சா.1 தனது சாட்சியத்தில், அங்கிருந்த நரசிம்மன், ராஜேந்திரன் ஆகியோர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள் என சாட்சியம் அளித்துள்ள நிலையில் மேற்படி நரசிம்மன், ராஜேந்திரன் வழக்கில் அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.4 மற்றும் அ.சா.5 தங்களது சாட்சியத்தில், எதிரி ஆறுமுகம், அ.சா.1–ஐ கட்டையால் பின் தலையில் தாக்கியத்தாக சாட்சியம் அளிக்கப்படவில்லை மேற்படி சாட்சிகளும் பிறழ் சாட்சிகளாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

xii) சம்பவ இடம் பொது இடம் எனவும், எதிரிகள் கெட்ட வார்த்தையால் திட்டி அறுவேறுப்பையும், எரிச்சலையும் ஏற்படுத்தினார்கள் எனவும், எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்து அ.சா.1 மற்றும் அ.சா.2–க்கு அச்சத்தை ஏற்படுத்தினார்கள் என அரசு தரப்பில் சாட்சிகள் அடிப்படையில் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

xiii) எனவே 1 முதல் 3 எதிரிகள், அ.சா.1 மற்றும் அ.சா.2 கெட்ட வார்த்தைகளால் திட்டியும், கையாலும், கட்டையாலும், அரிவாளாலும் தாக்கி

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.30 18:00:48 +0530

காயப்படுத்தியும், கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சிகள் அடிப்படையில் நிரூபிக்கப்படாத காரணத்தினால் சந்தேகத்தின் பலனை 1 முதல் 3எதிரிகளுக்கு அளித்து எதிரிகளின் மீது சுமத்தியுள்ள குற்றத்தை எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யத் தவறிவிட்டது என்று இந்நீதிமன்றம் அரசு தரப்புக்கு எதிராக முடிவு செய்கிறது.

11. எனவே, **முடிவாக,** 1–வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 294(b), 323, 324, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டுகளும், 2–வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 323, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டுகளும் 3–வது எதிரி மீது இந்திய தண்டனைச்சட்டபிரிவுகள் 324, 506(2)–ன் கீழான குற்றச்சாட்டுக்களும், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டார்கள் என்று தீர்மானித்து, 1 முதல் 3 எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிக்காக எழுதி கொடுக்கப்பட்ட பிணையபத்திரங்கள் இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 –ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.30 18:00:52 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்

பாலக்கோடு.

**அனுபந்தம்**

**1. அரசு தரப்பு சாட்சிகள்**

அ.சா.1 – திரு.ராஜிவ் காந்தி

அ.சா.2 – திரு.முருகன்

அ.சா.3 – திரு.பவுன்ராஜ்

அ.சா.4 – திரு.நரசிம்மன்

அ.சா.5 – திரு.இராஜேந்திரன்

அ.சா.6 – திரு.வெங்கடேஷ்

அ.சா.7 – திரு.விஜய்

அ.சா.8 – திரு. பாலசுப்பிரமணியம் (மருத்துவர்)

அ.சா.9 – திரு. ஜெயராமன் (காவல் உதவி ஆய்வாளர்)

**2.அரசு தரப்பு சான்றாவணங்கள்**

அ.சா.ஆ – 1 புகார் வாக்குமூலம்

அ.சா.ஆ – 2 பார்வை மகஜர்

அ.சா.ஆ – 3 காயச்சான்று (ராஜிவ் காந்தி)

அ.சா.ஆ – 4 காயச்சான்று (முருகன்)

அ.சா.ஆ – 5 முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ – 6 மாதிரி வரைபடம்

3. **அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்** – இல்லை

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.30 18:00:58 +0530

4. **எதிரி தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள்,**

**சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்** – இல்லை

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.30 18:01:04 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்

பாலக்கோடு.

குறிப்பு–

1. இத்தீர்ப்பின் நகல் அரசு தரப்பினருக்கு இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் சென்றுள்ளார்.
4. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை.